*KALAM – International Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*14(2), 2021*

# சிறு கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்களும் சவால்களும்: தென்மராட்சிப் பிரதேசத்தை சிறப்பாகக் கொண்ட ஆய்வு

**கதூசா என்.[1] மற்றும் உதயகுமார் எஸ்.எஸ்.[2]**
[1,2]Department of Economics, University of Jaffna

Corespondence: [1]kathoosa@gmail.com, [2]ssuthayan71@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் கைத்தொழில்கள் முக்கிய பங்காற்றுகின்றன. இந்நிலையில் சிறு கைத்தொழில்கள் பிரதேச வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பை வழங்கிவருகின்றன. அந்தவகையில் தென்மராட்சிப் பிரதேச வளர்ச்சியில் சிறு கைதொழில்கள் முக்கிய பங்காற்றுவதுடன் அவற்றுக்கு பல்வேறு வாய்ப்புக்களும் சவால்களும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வானது தென்மராட்சிப் பிரதேச சிறு கைத்தொழில்களுக்கு கிடைக்கும் வாய்ப்புக்கள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் போன்றவற்றை இனங்காண்பதாக அமைந்துள்ளது. ஆய்வுப் பிரதேசத்தில் முக்கியமான சிறு கைத்தொழில்களில் 30 சிறு கைத்தொழில்களுக்கு வினாக்கொத்து வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்விற்கு நேர்காணல், வினாக்கொத்து, நேரடி அவதானம், தொலைபேசி கலந்துரையாடல் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் SPSS, Excel ஆகியவற்றின் ஊடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு முடிவானது ஞறுமுவு பகுப்பாய்வு, விபரண புள்ளிவிபர பகுப்பாய்வு ரீதியாகவும் வரைபடம், புள்ளிவிபர அட்டவணைகள் ஊடாகவும் பெறப்பட்டுள்ளது. இவ்வாய்வில் பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவின்படி இயற்கை வளங்கள், ஊழியம், அமைவிடம், உள்ளூர் சந்தைவாய்ப்பு தொடர்பில் வாய்ப்புக்களும் மூலதனம், வெளியூர் சந்தைவாய்ப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருட்கள் கிடைப்பனவு, உட்கட்டமைப்பு, ஊக்குவிப்புக்கள் தொடர்பில் சவால்களும் காணப்படுவது இனங்காணப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் சவால்களை வாய்ப்பாக மாற்றுவதற்கு அரசு, கைத்தொழில் திணைக்களம் என்பன திட்டமிட்டு செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதாவது இலகு கடன் திட்டங்கள், பயிற்சிகள், கண்காட்சி செயற்பாடுகள், சந்தைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தல், புதிய தொழில்நுட்ப வசதிகளை கிடைக்கச் செய்தல், மூலப் பொருட்களை இலகுவில் கிடைக்கச் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றின் ஊடாக சிறு கைத்தொழில்களை மேலும் முன்னேற்றமடையச் செய்ய முடியும்.

**முக்கிய சொற்கள்**: சிறு கைத்தொழில்கள், சிறு கைத்தொழில்களுக்கான, வாய்ப்புக்கள், சிறு கைத்தொழில்களுக்கான சவால்கள்

## 1. ஆய்வின் அறிமுகம்

சிறு கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்களும் சவால்களும் - தென்மராட்சி பிரதேசத்தைச் சிறப்பாகக் கொண்ட ஓர் ஆய்வாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. அதாவது ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படும் வளங்களை அடிப்படையாகக் கொண்டு சிறு கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்களையும் எதிர்நோக்கும் சவால்களையும் பற்றி ஆய்வு செய்வதாகவே இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்நிலையில் தென்மராட்சிப் பிரதேச சிறு கைத்தொழில்கள் தொடர்பாக நோக்கும் போது பல்வேறு வாய்ப்புக்களும் சவால்களும் காணப்படுகின்றன.

இன்றைய பொருளாதாரங்களில் சிறு கைத்தொழில்கள் பிரதேச ரீதியில் குறிப்பிடக்கூடிய பங்களிப்பை வழங்கி வழங்குகின்றன. இந்நிலையில் தென்மராட்சிப் பிரதேச சிறு கைத்தொழில்களின் உற்பத்தி, வருமானம், வேலைவாய்ப்பு, உள்ளூர் வளப்பயன்பாடு தொடர்பில் வாய்ப்புக்களும் சவால்களும் காணப்படுகின்றன. சொத்துக்களின் பெறுமதி, தொழிலாளர்களின் எண்ணிக்கை, மூலதனத்தின் அளவு, வருமானம், உற்பத்தி என்பவற்றின் அடிப்படையில் சிறிய, நடுத்தர தொழில், முயற்சிகள் வகைப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்தவகையில் இலங்கை தொகை மதிப்பு புள்ளிவிபரவியல் திணைக்களமானது 10 பேருக்குட்பட்ட தொழிலாளர்களைக் கொண்ட தொழில் முயற்சி சிறு தொழில் எனவும், சிறு கைத்தொழில் திணைக்களமானது 5 மில்லியனுக்குட்பட்ட மூலதனத்தினையும் 50 தொழிலாளர்களையும் கொண்டவை சிறு கைத்தொழில் எனவும் வகைப்படுத்தியுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் பாரிய கைத்தொழில் செயற்பாடுகள் இடம்பெறாத போதும் சிறிய மற்றும் நடுத்திரக் கைத்தொழில்கள் முக்கிய இடம் பெறுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தில் தென்னை, பனை சார் கைத்தொழில் செயற்பாடுகள் முக்கியம் பெறுகின்றன. மேலும் உணவு சார் உற்பத்திச் செயற்பாடுகள், சிற்ப வேலை, மட்பாண்ட உற்பத்தி, ஆடை தயாரிப்பு தோற்பொருள் சார் உற்பத்திகள் போன்றனவும் இடம்பெறுகின்றன.

எனவே இந்த ஆய்வானது ஆய்வுப் பிரதேசத்தின் சிறு கைத்தொழில் செயற்பாடுகளின் வளர்ச்சியினை அதிகரிக்கும் நோக்கிலும் கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்கிலும் மேற்கொள்ளப்படுவதுடன் இந்த ஆய்வானது சிறு கைத்தொழில்களை மேலும் விருத்தி செய்ய ஒரு தீர்வுத் திட்டமாகவும் அமையும்.

இவ் ஆய்விற்காக தென்மராட்சிப் பிரதேச சிறு கைத்தொழில்கள் தெரிவுசெய்யப்பட்டது. இங்கு 60 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. தென்மராட்சி பிரதேச செயலக பிரிவானது 232.19 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டு காணப்படுகின்றது. இப் பிரதேசமானது 23,016 குடும்பங்களையும் 72,819 மக்கள்தொகையையும் கொண்டு காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசத்தில் 694 சிறு கைத்தொழில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன (பிரதேச செயலக அறிக்கை, 2018).

### 1.1 ஆய்வின் நோக்கங்கள்

''சிறு கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்களும் சவால்களும்:- தென்மராட்சிப் பிரதேசத்தை சிறப்பாகக் கொண்ட ஆய்வு'' என்னும் இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. தென்மராட்சிப் பிரதேச சிறு கைத்தொழில் செயற்பாடுகளை அடையாளம் காணுதல், சிறு கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்களை இனங்காணல், சிறு கைத்தொழில்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்களை கண்டறிதல் போன்றன காணப்படுகின்றன.

### 1.2 ஆய்வின் கருதுகோள்கள்

**$H_1$ -** தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிறு கைத்தொழிலகளின் வளர்ச்சியில் இயற்கை வளங்கள், ஊழியம், அமைவிடம், ஊக்குவிப்புக்கள் என்பன நேர்க்கணியதுமானதும் குறிப்பிடத்தக்கதுமான செல்வாக்கைச் செலுத்துகின்றது.

**$H_2$ -** தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிறு கைத்தொழில்களுக்கு மூலதனம், சந்தைவாய்ப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருள் கிடைப்பனவு, உட்கட்டமைப்பு போன்ற காரணிகள் சவாலாகக் காணப்படுகின்றது.

## 2. முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

ஆயதெரளஅவைய மற்றும் Kulveen (2012) ஆகியோரின் "Youth Entrepreneurship as a Way of Boosting Indian Economic Competitiveness: A Study of Orissa" எனும் ஆய்வானது இந்தியாவின் ஒரிசா மாநிலத்தின் டீாரடியநௌறயசஇ ஊரவவயஉம நகரங்களில் தொழில் புரியும் 100 இளம் முயற்சியாளர்களை நேர்காணல் மூலமும் கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் மூலமும் பெறப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்மைக்காலங்களில் இளைஞர்கள் தொழில் முயற்சியாளர்களாக வருவதற்கு தூண்டுதல் காரணியாக அமைந்தது உயர் வேலையின்மையாகும். இந்த இளம் தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தேசிய ரீதியில் ஊக்குவிப்புக்கள், பயிற்சிகள், நிதியியல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றின் மூலம் வெற்றி அடைய முடியும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

Dasanayake (2010) Overview of Sri Lankan Small and Medium Scale Enterprise என்னும் ஆய்வுக் கட்டுரையில் சிறிய நடுத்தர கைத்தொழில்கள் பல்வேறு நிறுவனங்களின் வகைகளும் அவற்றின் பொருளாதார செயற்பாடுகள் பற்றியும் விளக்கியுள்ளார். இந்த ஆய்வில் சிறிய, நடுத்தர கைத்தொழில் முயற்சிகள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் ளுஆநுள நச்சு வட்டம் பற்றி விரிவாக குறிப்பிட்டுள்ளார்.

Shankary.K (2009) என்பவரின் "A study on small industries development in Manmunaipattu D.S Division in the Batticaloa Division" எனும் இவ்வாய்வானது இப்பிரதேசத்திலுள்ள சிறுகைத்தொழில் முயற்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை பற்றிய ஒரு மதிப்பீட்டை வழங்குவதுடன் சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் முன்வைப்பதாக அமைந்துள்ளது.

அருள்வபில்ராஜ். அ மற்றும் விஜயகுமார்.சி (2017), ஆகியோரின் "சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார மற்றும் சமூகப் பங்களிப்பு:- சண்டிலிப்பாய் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு" எனும் ஆய்வு கட்டுரையில் 58 சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகள் எழுமாற்றாக தெரிவு செய்யப்பட்டு அங்கு தொழில் புரியும் 84 தொழிலாளர்களையும் ஆய்வுக்குட்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வு நோக்கமாக சிறிய நடுத்தர தெரழில் முயற்சிகளின் செயற்பாட்டின் மூலம் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் அதிகரிக்கின்றதா? மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட சமூகப் பொறுப்புடன் செயற்படுகின்றன என்பது பற்றியதாகும். இந்த ஆய்வானது பண்பு சார் மற்றும் அளவு சார் அணுகுமுறைகளைக் கொண்டமைந்தும் பகுப்பாய்வுக் கருவிகளாக பிற்செலவு அணுகுமுறைகளைக் கொண்டும் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒரு விபரண ரீதியான ஆய்வாக் காணப்படுகின்றது.

Vijayakumar.S (2013) என்பவரின் "Growth and Issues of Small and Medium Enterprises in Post Conflict Jaffna Srilanka" என்னும் ஆய்வுக் கட்டுரையில் யுத்தத்தின் பின்னர் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளானது மிக குறைந்தளவான வளர்ச்சியை அடைந்து வருகின்றது. இவ் ஆய்வின் முடிவானது ஆய்வின் நோக்கத்தின் நேர்க்கணிய பெறுமதியைக் கொண்டிருக்கின்றது என குறிப்பிட்டுள்ளார்.

சுதர்ஜினி.ப, (2011) என்பவர் "தென்மராட்சிப் பகுதியில் கைத்தொழில் அபிவிருத்திக்கு பொருத்தமான இடத்தெரிவு - புவியியல் தகவல் ஒழுங்கின் பல்பரிமாணத் தீர்வின் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டது". இவ்வாய்வின் பயனாக கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பொருத்தமான இடத்தெரிவு உள்ளுர் வளங்களை சந்தைப்படுத்தல், தொழில்வாய்ப்பு உருவாக்கல், பிரதேச அபிவிருத்தி ஏற்படல் என்பன காணப்படுகிறது. மேற்படி ஆய்வின் பிரகாரம் இதில் பயன்படுத்தப்பட்டுள்ள தரவு, தரவு சேகரிப்பு முறைகள், ஆய்வின் பயன் என்பவற்றிற்கும், இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ள முறைமைக்கும் இடையில் ஒப்புமை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

Varatharajan. M, Uthayakumar.S.S மற்றும் Rajeswaran .S.T.B (2017) ஆகியோரின் "தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் நிலவளப் பயன்பாடு: ஓர் ஆய்வு" எனும் ஆய்வின் நோக்கம் மற்றும் முடிவிற்கிணங்க நில வளப்பயன்பாடுகள், முறையாக இனங்காணப்பட்டதோடு அவற்றை வினைத்திறனாக பயன்படுத்திக்கொள்ள மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், முகாமைச் செயற்பாடுகள், பெறுபேறுகள் என்பனவும் கண்டறியப்பட்டுள்ளது.

### 3. ஆய்வு முறையியல்

இங்கு சிறு கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்களும் சவால்களும் எனும் ஆய்வினை மேற்கொள்வதற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டு அளவு ரீதியாகவும் பண்பு ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாய்வுப் பிரதேசத்தில் 694 சிறு கைத்தொழில்கள் காணப்பட்ட போதும் முழுக் குடியையும் ஆய்விற்கு உட்படுத்தும் போது காலதாமதம், பணவிரயம், ஆளணிப் பற்றாக்குறை போன்றன ஏற்படுகின்றன. இதன் காரணமாக இந்த ஆய்விற்காக முக்கியமாக தெரிவு செய்யப்பட்ட 7 சிறு கைத்தொழில் வகைகளைச் சார்ந்த 143 சிறு கைத்தொழில்களில் 20% மாதிரி எடுப்பு அடிப்படையில் 30 சிறு கைத்தொழில்கள் தெரிவு செய்யப்பட்டு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்விற்காக நேரடி அவதானம், நேர்காணல், வினாக்கொத்து ஊடாகவும் சேகரிக்கப்பட்ட முதலாம் நிலைத் தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளானவை Statistical package for Social Sciences (SPSS) என்ற மென்பொருள் நுட்பத்தினூடாக சிறப்பான முறையில் தேவைக்கேற்ற விதத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. இத்தரவுகளினுடைய தொகுப்பானது ளுறுழுவு பகுப்பாய்வு, விபரணப் புள்ளிவிபரவியல் பகுப்பாய்விற்கமைய ஆய்வின் தேவைக்கேற்ற வகையில் பொருத்தமான வரைபுகள், அட்டவணைகள், சுருக்கங்களாக தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

### 4. தரவுப்பகுப்பாய்வும் பெறுபேறுகளும்

#### 4.1. கருதுகோள் பகுப்பாய்வு - 01

**$H_0$** தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிறு கைத்தொழில்களின் வளர்ச்சியில் இயற்கை வளங்கள், ஊழியம், அமைவிடம், ஊக்குவிப்புக்கள் என்பன நேர்க்கணியதுமானதும் குறிப்பிடத்தக்கதுமான செல்வாக்கைச் செலுத்துகின்றது.

**$H_1$** தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிறு கைத்தொழில்களின் வளர்ச்சியில் இயற்கை வளங்கள், ஊழியம், அமைவிடம், ஊக்குவிப்புக்கள் என்பன நேர்க்கணியதுமானதும் குறிப்பிடத்தக்கதுமான செல்வாக்கைச் செலுத்தவில்லை.


#### 4.1.1 இயற்கை வளங்கள்

**அட்டவணை 4.1 : இயற்கை வளங்களின் கிடைப்பனவு**

| இயற்கை வளங்களின் கிடைப்பனவு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 1 - 20% agree | 5 | 16.7% |
| 21 - 40% agree | 2 | 6.7% |
| 41 - 60% agree | 4 | 13.3% |
| 61 - 80% agree | 7 | 23.3% |
| 81 - 100% agree | 12 | 40.0% |
| Total | 30 | 100.0% |

மூலம்: கள ஆய்வு, 2019

**வரைபடம் 4.1: இயற்கை வளங்களின் கிடைப்பனவு**




*மூலம்: கள ஆய்வு, 2019*

சிறு கைத்தொழில்களுக்கான இயற்கை வளங்களின் கிடைப்பனவை நோக்கும் போது மொத்த ரீதியாக சிறு கைத்தொழில்களுக்கு 61% உடன்பாட்டிற்கு மேற்பட்ட இயற்கை வளங்களின் கிடைப்பனவானது 63.3% மாகக் காணப்படுகின்றது. இந்த அளவானது சராசரியாக 50% க்கு மேற்பட்டதாகக் காணப்படுவதால் இயற்கை வளங்களின் கிடைப்பனவு சிறு கைத்தொழில்களுக்கு வாய்ப்பாகக் காணப்படுகின்றது.


### 4.1.2 ஊழியம்

**அட்டவணை 4.2: பணிபுரியும் மணித்தியாயங்கள்**

| மணித்தியாலம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 2 | 4 | 13.3 |
| 3 | 3 | 10.0 |
| 4 | 3 | 10.0 |
| 5 | 2 | 6.7 |
| 6 | 1 | 3.3 |
| 7 | 1 | 3.3 |
| 8 | 14 | 46.7 |
| 9 | 2 | 6.7 |
| மொத்தம் | 30 | 100.0 |

*மூலம்: கள ஆய்வு 2019*

**வரைபடம் 4.2: பணிபுரியும் மணித்தியாயங்கள்**




*மூலம்: கள ஆய்வு 2019*


வரைபடத்தின்படி அதிகமான ஊழியர்கள் 8 மணித்தியாலமே பணிபுரிகின்றனர். அதாவது 8 மணித்தியாலம் மற்றும் அதற்கு மேல் வேலை செய்பவர்களின் வீதமானது 53.4% ஆக காணப்படுகின்றமையானது குறிப்பிடத்தக்க நேர்க்கணியத்தைக் கொண்டு காணப்படுகின்றது.

**அட்டவணை 4.3 : பணிபுரியும் நாட்கள்**

| நாட்கள் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 17 | 1 | 3.3 |
| 18 | 2 | 6.7 |
| 20 | 3 | 10.0 |
| 23 | 4 | 13.3 |
| 24 | 1 | 3.3 |
| 25 | 2 | 6.7 |
| 26 | 14 | 46.7 |
| 30 | 3 | 10.0 |
| மொத்தம் | 30 | 100.0 |

*மூலம்: கள ஆய்வு 2019*

**வரைபடம் 4.3 : பணிபுரியும் நாட்கள்**




மூலம்: கள ஆய்வு 2019


வரைபடத்தின்படி சிறு கைத்தொழில் செயற்பாடுகளில் 46.7% மான ஊழியர்கள் 26 நாட்கள் பணிபுரிவதுடன் 10% மான ஊழியர்கள் 30 நாட்கள் வேலை செய்கின்றனர்.. 26 நாட்களுக்கு மேல் சிறு கைத்தொழிலில் பணிபுரிபவர்கள் 56.7% ஆகக் காணப்படுகின்றமையானது சிறு கைத்தொழில்களில் நேர்க்கணியமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 4.4: ஊழிய செயற்திறன்**

| ஊழிய செயற்திறன் அளவு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 41 - 60% agree | 8 | 26.7 |
| 61 - 80% agree | 16 | 53.3 |
| 81 - 100% agree | 6 | 20.0 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.4 : ஊழிய செயற்திறன்**




வரைபடத்தின்படி ஆய்வுப் பிரதேசத்தில் சிறு கைத்தொழில்களில் பணிபுரியும் பெரும்பாலான ஊழியர்களின் செயற்திறன் உடன்பாட்டு தன்மை 73.3% மான சிறு கைத்தொழில்களில் காணப்படுகின்றது. எனவே இந்நிலைமையானது சிறு கைத்தொழில்களுக்கு வாய்ப்பாகக் காணப்படுகின்றது.


### 4.1.3 அமைவிடம்

**அட்டவணை 4.5: அமைவிட பங்களிப்பு**

| அமைவிட பங்களிப்பு அளவு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 0-21% agree | 0 | 0 |
| 21 - 40% agree | 4 | 13.3 |
| 41 - 60% agree | 9 | 30.0 |
| 61 - 80% agree | 11 | 36.7 |
| 81 - 100% agree | 6 | 20.0 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.5: அமைவிட பங்களிப்பு**




அடைவிடப் பங்களிப்பை நோக்குகின்ற போது 56.7% சிறு கைத்தொழில்களுக்கு அமைவிடம் சாதகமாகக் காணப்படுகின்றமையானது வாய்ப்பாகக் காணப்படுகின்றது.


### 4.1.4 ஊக்குவிப்புக்கள்

**அட்டவணை 4.6 : ஊக்குவிப்பு வகை**

| ஊக்குவிப்பு வகை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| கடன் | 14 | 46.7 |
| பயிற்சி | 4 | 13.3 |
| ஊக்குவிப்பு இல்லை | 12 | 40.0 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.6 : ஊக்குவிப்பு வகை**



ஆய்வுப் பிரதேசத்தில் சிறு கைத்தொழில்களுக்கான ஊக்குவிப்பு என்பது குறைவாகவே காணப்படுகின்றது. ஊக்குவிப்பு என்றவகையில் கடன் மற்றும் பயிற்சி வழங்கப்படுகின்றது. 46.7% மான சிறு கைத்தொழில்களுக்கு கடன்களும் 13.3% மான சிறு கைத்தொழில்களுக்கு பயிற்சியும் வழங்கப்படுகின்றது. இங்கு 40% சிறு கைத்தொழில்களுக்கு ஊக்குவிப்பு கிடைக்கப்பெறாத நிலை காணப்படுகின்றது. பொதுவாக ஊக்குவிப்பு என்பது சிறு கைத்தொழில்களுக்கு வாய்ப்பாக காணப்பட்ட போதிலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஊக்குவிப்புக்கள் சிறு கைத்தொழில்களுக்கு குறைவாகக் கிடைக்கின்றமையானது சவாலாகக் காணப்படுகின்றது.

**4.2. கருதுகோள் பரிசோதனை - 02**

**$H_0$** தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிறு கைத்தொழில்களுக்கு மூலதனம், சந்தைவாய்ப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருள் கிடைப்பனவு, உட்கட்டமைப்பு போன்ற காரணிகள் சவாலாகக் காணப்படுகின்றது.

**$H_1$** தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள சிறு கைத்தொழில்களுக்கு மூலதனம், சந்தைவாய்ப்பு, தொழில்நுட்பம், மூலப்பொருள் கிடைப்பனவு, உட்கட்டமைப்பு போன்ற காரணிகள் சவாலாகக் காணப்படவில்லை.


**4.2.1. மூலதனம்**

**அட்டவணை 4.7 : மூலதன கிடைப்பனவு**

| மூலதன கிடைப்பனவு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| Yes | *11* | *36.7* |
| No | *19* | *63.3* |
| மொத்தம் | *30* | *100.0* |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.7 : மூலதன கிடைப்பனவு**




சிறு கைத்தொழில்களுக்கான போதிய மூலதன கிடைப்பனவானது 37% மான சிறு கைத்தொழில்களுக்கு கிடைக்கின்றது. அதாவது அதிக சேமிப்பை ஏற்படுத்தக்கூடிய வருமானமானது 37% கைத்தொழில்களுக்கே கிடைக்கின்றது. 63% மான சிறு

கைத்தொழில்களுக்கு போதியளவான மூலதனம் கிடைக்கப்பெறாமையானது சவாலாக்க காணப்படுகின்றது.


### 4.2.2. சந்தைவாய்ப்பு

**அட்டவணை 4.8: சந்தைப்படுத்தப்படும் இடம்**

| சந்தைவாய்ப்பு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| Local | 21 | 70.0 |
| Outside | 2 | 6.7 |
| Both | 7 | 23.3 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.8: சந்தைப்படுத்தப்படும் இடம்**





தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறு கைத்தொழில் உற்பத்திகள் உள்ளூர், வெளியூர் மற்றும் இரண்டிலும் சந்தைப்படுத்தப்படுகின்றது. 70% மான உற்பத்திகள் உள்ளூரிலே சந்தைப்படுத்தப்படுகின்றது. தென்மராடசிப் பிரதேசத்திற்குள் சந்தைப்படுத்தல் பிரச்சினை குறைவாகக் காணப்பட்டாலும் வெளியூரில் சந்தைப்படுத்தல் என்பது சில கைத்தொழில்களுக்கு சவாலாகக் காணப்படுகின்றது.

**அட்டவணை 4.9 : சந்தைக் கேள்வி**

| சந்தைக் கேள்வி | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 21 - 40% agree | 1 | 3.3 |
| 41 - 60% agree | 14 | 46.7 |
| 61 - 80% agree | 11 | 36.7 |
| 81 - 100% agree | 4 | 13.3 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு, 2019

**வரைபடம் 4.9 : சந்தைக் கேள்வி**




சிறு கைத்தொழில்களுக்கான சந்தைக் கேள்வியில் அண்ணளவாக 50% உற்பத்திகளுக்கே உயர்ந்த கேள்வி காணப்படுகின்றது. மிகுதி 50% உற்பத்திகளக்கு குறைந்த கேள்வியே காணப்படுகின்றது. இவ்வாறான தன்மை சந்தைப்படுத்தல் தொடர்பாக 50மூ சிறு கைத்தொழில்களுக்கு வாய்ப்பாகக் காணப்படுகிறது.


### 4.2.3. தொழில்நுட்பம்

**அட்டவணை 4.10: தொழில்நுட்ப முறை**

| தொழில்நுட்ப தன்மை | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| Traditional | 7 | 23.3 |
| Modern | 12 | 40.0 |
| Both | 3 | 10.0 |
| No equipment | 8 | 26.7 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.10 : தொழில்நுட்ப முறை**




40% சிறு கைத்தொழில்களில் நவீன உற்பத்திக் கருவிகளும் பயன்படுத்தப்படுவதுடன் 10% மான சிறு கைத்தொழில்களில் பாரம்பரிய மற்றும் நவீன உற்பத்தி முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் 26.7% மான சிறு கைத்தொழில்களுக்கு மனித வளமே பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

**அட்டவணை 4.11 : புதிய தொழில்நுட்பம் சேர்த்தல்**

| புதிய தொழில்நுட்பம் சேர்த்தல் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| Yes | 10 | 33.3 |
| No | 20 | 66.7 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.11: புதிய தொழில்நுட்பம் சேர்த்தல்**




மூலம்: கள ஆய்வு, 2019

67% மானவர்கள் புதிய தொழில்நுட்பத்தினை சேர்ப்பதற்கு உடன்பாட்டைக் கொண்டிருக்கவில்லை. மூலதனப் பற்றாக்குறை, குறைந்தளவான உற்பத்தி போன்றவற்றின் காரணமாக புதிய தொழில்நுட்பத்தை சேர்க்கும் உடன்பாடு குறைவாகக் காணப்படுகின்றது. இந்நிலைமையும் பாரியளவான உற்பத்திகளை மேற்கொள்ள சவாலாகக் காணப்படுகின்றது.


### 4.2.4. மூலப்பொருள் கிடைப்பனவு

**அட்டவணை 4.12: மூலப்பொருள் கிடைக்கும் இடம்**

| மூலப்பொருள் கிடைக்கும் இடம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| Local | 20 | 66.7 |
| Outside | 5 | 16.7 |
| Both | 5 | 16.7 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.12 : மூலப்பொருள் கிடைக்கும் இடம்**




*மூலம்: கள ஆய்வு 2019*


சிறு கைத்தொழில்களுக்கான மூலப்பொருள் உள்ளூரிலும் வெளியூரிலும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. 66% மான மூலப்பொருட்கள் உள்ளூரிலே பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

**அட்டவணை 4.13 : மூலப்பொருள் கிடைக்கும் அளவு**

| மூலப்பொருள் கிடைக்கும் அளவு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 21 - 40% agree | *1* | *3.3* |
| 41 - 60% agree | *16* | *53.3* |
| 61 - 80% agree | *12* | *40.0* |
| 81 - 100% agree | *1* | *3.3* |
| மொத்தம் | *30* | *100.0* |

*மூலம்: கள ஆய்வு 2019*

**வரைபடம் 4.13 : மூலப்பொருள் கிடைக்கும் அளவு**




வரைபடத்தின்படி 3.3% மான சிறு கைத்தொழில்களுக்கு மூலப்பொருட்கள் கிடைக்கும் தன்மையானது 81-100% உடன்பாட்டைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. 40% மான சிறு கைத்தொழில்களுக்கு 61-80% உடன்பாடு காணப்படுகின்றது. மூலப்பொருள் கிடைக்கும் தன்மையானது பெரும்பாலான கைத்தொழில்களுக்கு (56.6%) கடினமானதாகக் காணப்படுகின்றது.


### 4.2.5. உட்கட்டமைப்பு

**அட்டவணை 4.14: சிறு கைத்தொழில் நடைபெறும் இடம்**

| சிறு கைத்தொழில் நடைபெறும் இடம் | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| House | 17 | 56.7 |
| Reserved for small industries | 13 | 43.3 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம் :- கள ஆய்வு 2019

**வரைபடம் 4.14 : சிறு கைத்தொழில் நடைபெறும் இடம்**




மூலம்: கள ஆய்வு 2019


வரைபடத்தின்படி சிறு கைத்தொழில்கள் இடம்பெறும் இடமாக வீடு மற்றும் சிறு கைத்தொழிலுக்கு ஒதுக்கப்பட்ட இடம் காணப்படுகின்றது. இங்கு 57% மான சிறு கைத்தொழில்கள் வீடுகளில் இடம்பெறுகின்றது.

**அட்டவணை 4.15 : உட்கட்டமைப்பு வசதி கிடைப்பனவு**

| உட்கட்டமைப்பு வசதி கிடைப்பனவு | எண்ணிக்கை | வீதம் |
|---|---|---|
| 1 - 20% agree | **9** | **30.0** |
| 21 - 40% agree | 10 | 33.3 |
| 41 - 60% agree | 2 | 6.7 |
| 61 - 80% agree | 6 | 20.0 |
| 81 - 100% agree | 3 | 10.0 |
| மொத்தம் | 30 | 100.0 |

மூலம்: கள ஆய்வு 2019

**வரைபடம் 4.15: உட்கட்டமைப்பு வசதி கிடைப்பனவு**




வரைபடத்தின்படி சிறு கைத்தொழில்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் என்ற அடிப்படையில் இங்கு களஞ்சியப்படுத்தல் வசதி மற்றும் போக்குவரத்து வசதி என்பன கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. 10% மான சிறு கைத்தொழில்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகள் கிடைப்பில் 81-100% உடன்பாடு காணப்படுகின்றது. 20% மான சிறு கைத்தொழில்களுக்கு 61-80% உடன்பாடு காணப்படுவதுடன் இவ்வாறான ஒரு பற்றாக்குறை நிலையானது சிறு கைத்தொழில்களுக்கு சவாலாகக் காணப்படுகின்றது.

### 5. கண்டுபிடிப்புக்களும் பரிந்துரைகளும்

இந்த ஆய்வின் அடிப்படையில் சிறு கைத்தொழில்களுக்கான வாய்ப்புக்கள் என்ற ரீதியில் இயற்கை வளங்கள், ஊழியம், அமைவிடம், ஊக்குவிப்புக்கள் போன்ற காரணிகளின் இனங்காணப்பட்டுள்ளன. அந்தவகையில் இக் காரணிகள் தென்மராட்சிப் பிரதேச சிறு கைத்தொழில் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்துகின்றமையானது வாய்ப்பாகக் காணப்படுகின்றது.

சிறு கைத்தொழில் முயற்சியில் ஊக்குவிப்புக்களின் பங்களிப்பு என்பது மிகக் குறைவானதாகக் காணப்படுகின்றது. இங்கு 40% சிறு கைத்தொழில் செயற்பாடுகளுக்கு எந்தவிதமான ஊக்குவிப்புக்களும் கிடைக்காத நிலை காணப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேச பெரும்பாலான சிறு கைத்தொழிலாளர்கள் தங்களுடைய தொழில் முயற்சிகளை குறைந்த மூலதனத்தைக் கொண்டே ஆரம்பித்துள்ளார்கள். பெரும்பாலான சிறு கைத்தொழில்களில் இலாபம் குறைவாகக் காணப்படுவதால் மீள் முதலீடு என்பதும் குறைவாகக் காணப்படுகின்றது.

சந்தைப்படுத்தல் தொடர்பாக உள்ளூரில் சிறு கைத்தொழில் உற்பத்திகளுக்கான கேள்வி ஓரளவு காணப்படுகின்றது. ஆனால் உற்பத்திப் பொருட்களை வெளியூரில் சந்தைப்படுத்த போதிய சந்தைவாய்ப்பு காணப்படாமையானது பிரச்சினையாகக் காணப்படுகின்றது. சிறு கைத்தொழில் உற்பத்திப் பொருட்களுக்கு இறக்குமதிப் பிரதியீட்டுப் பொருட்கள் சந்தையில் காணப்படுகின்றமையால் உள்நாட்டு சிறு கைத்தொழில் உற்பத்திகள் பாதிக்கப்படுகின்றது.

ஆய்வுப் பிரதேசத்தில் 40% சிறு கைத்தொழில்களில் நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்ட போதும் பாரம்பரிய உபகரணங்கள் மற்றும் பாரம்பரிய உற்பத்தி முறைகளே அதிகளவில் உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயற்கை வளங்கள் தவிர்ந்த மூலப்பொருட்களைப் பெறுவதில் பல சவால்கள் காணப்படுகின்றன. இங்கு 56.6% சிறு கைத்தொழில்களுக்கு மூலப்பொருள் கிடைப்பனவானது பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

ஆய்வுப்பிரதேசத்தில் களஞ்சியப்படுத்தல் வசதி, போக்குவரத்து வசதி போன்றவற்றின் பற்றாக்குறை மூலப்பொருள் கிடைப்பனவு மற்றும் சந்தைப்படுத்தலில் தாக்கத்தைச் செலுத்துகின்றது.

### *5.1. சவால்களுக்கான பரிந்துரைகள்*

சிறு கைத்தொழிலாளர்களுக்கு தேவையான கடன் வசதிகள், பயிற்சிகள், கண்காட்சிகள், சந்தைவாய்ப்பைப் பெற்றுக்கொடுத்தல் போன்ற செயற்பாடுகளை செயற்திறனாக முன்னெடுத்துச் செல்வது சிறு கைத்தொழில்களுக்கு நன்மையளிப்பதாகக் காணப்படும்.

சிறு கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு போதிய மூலதன வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும். தொழில் முயற்சியாளர்களுக்கு குறைந்த வட்டியில் கடன்களை வழங்குதல், நீண்டகால கடன் வசதிகளை வழங்குதல், முயற்சியாளர்கள் விரும்புகின்ற அளவில் கடன் வசதி கிடைத்தல் மூலம் நிதி வசதிகளை விஸ்தரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தல் வேண்டும். அவற்றுக்கான பயிற்சிகளையும் வழங்குதல் வேண்டும். சிறு கைத்தொழில் நடவடிக்கைகளை மக்களிடம் கொண்டு சேர்ப்பதற்கு இணையத்தளங்களினைப் பயன்படுத்திக்கொள்ள வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

இயற்கை வளங்கள் தவிர்ந்த ஏனைய மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்ளை சிறு கைத்தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்கள் மற்றும் அவற்றின் தரம் தொடர்பான தகவல்களை இலகுவாகக் கிடைக்கச் செய்தல்.

போக்குவரத்துப் பாதைகளை சீர்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் ஆய்வுப் பரதேசத்தில் காணப்படும் கல்வி, வீட்டு வசதி, சுகாதார வசதி போன்றன ஆரோக்கியமான மனித வளத்தோடு தொடர்புடையனவாக் காணப்படுவதால் இவற்றுடன் இணைந்த பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### முடிவுரை

இந்த ஆய்வின் முடிவாக இயற்கை வளங்கள், ஊழியம், அமைவிடம், உள்ளூர் சந்தைவாய்ப்பு போன்றன வாய்ப்பாகக் காணப்படுகின்றது. ஊக்குவிப்புக்கள், மூலதனம், வெளியூர் சந்தைவாய்ப்பு, தொழில் நுட்பம், மூலப்பொருள் கிடைப்பனவு, உட்கட்டமைப்பு வசதி ஆகியன சாவாலாகக் காணப்படுகின்றது. சிறு கைத்தொழில் வளர்ச்சிக்கு தடையாக உள்ள ஊக்குவிப்புக்கள், மூலதனம், வெளியூர் சந்தைவாய்ப்பு, தொழில் நுட்பம், மூலப்பொருள் கிடைப்பனவு, உட்கட்டமைப்பு வசதி ஆகிய காரணிகளை குறைப்பதற்கு நன்கு திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் சிறு கைத்தொழில்களில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்.

### உசாத்துணைகள்

Manjusmita. D, Kulveen. K, (2012), "Youth Entrepreneurship as a Way of Boosting Indian Economic Competitiveness: A Study of Orissa", International Review of Management and Marketing, Vol. 2, No. 1, 2012, pp.10-21. available at from https://www.econjournals.com/index.php/irmm/article/view/97

Shankary.K, (2009), "A study on small industries development in Manmunaipattu D.S Division in the Batticaloa Division", Eastern University of Sri Lanka, Oluvil.

Vijayakumar.S (2013), 'Growth and Issues of Small and Medium Enterprises in Post Conflict Jaffna Srilanka', Economia. Seria Management, Vol.16, Issue 1, 2013. available at from https://ideas.repec.org/a/rom/econmn/v16y2013i1p38-53.html

Varatharajan. M, Uthayakumar.S.S, Rajeswaran .S.T.B, (2017), "தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் நிலவளப் பயன்பாடு: ஓர் ஆய்வு", தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

*அருள்வபில்ராஜ். அ, விஜயகுமார். சி, (2017)*, "சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் பொருளாதார மற்றும் சமூகப் பங்களிப்பு : சண்டிலிப்பாய் பிரதேசத்தை மையமாகக் கொண்ட ஆய்வு", Proceedings of 7th International Symposium, SEUSL, 7th & 8th December 2017, South Eastern University of Sri Lanka.

*பிரதீஸ். சு, விஜயகுமார். சி, (2017)* "ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களும் அவை எதிர்நோக்கும் சவால்களும்", Proceedings of 7th International Symposium, SEUSL, 7th & 8th December 2017.

*சுதர்ஜினி. ப, (2011)*, "தென்மராட்சிப் பகுதியில் கைத்தொழில் அபிவிருத்திக்கு பொருத்தமான இடத்தெரிவு-புவியியல் தகவல் ஒழுங்கின் பல்பரிமாணத் தீர்வின் பகுப்பாய்வினை அடிப்படையாகக் கொண்டது", புவியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

*சுதன்.ஆ, (2017)*, "வடதொழில் சுபீட்சம்", தொழிற்துறைத் திணைக்களம், வடக்கு மாகாணம்

வருடாந்த செயலாற்றுகை மற்றும் கணக்குகள் அறிக்கை - யாழ்ப்பாணம் மாவட்டம் - *2018*,

Statistical hand book, (2019), Divisional Secretariat, Jaffna District